**ONE TWO ACADEMY**

**10 - ஆம் வகுப்பு**

**தமிழ்**

**இயல் - 8**

**மதிப்பெண்கள்:-50** **கால அளவு: 1.30 மணி நேரம்**

I சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். **10 x 1 = 10**

1. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ..........

அ) அகவற்பா ஆ) வெண்பா
இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

2. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்

அ) உதியன்; சேரலாதன் ஆ) அதியன்; பெருஞ்சாத்தன்

இ) பேகன்; கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன்; திருமுடிக்காரி

3. மேன்மை தரும் அறம் என்பது.......

அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது
ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
இ) புகழ் கருதி அறம் செய்வது
ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

4. 'வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல் ' இவ்வடி குறிப்பிடுவது ...............

அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை

இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை

5. காலக்க ணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர்.........

அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது

ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது

இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம்
ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

6. யாப்பின் உறுப்புகள்.......................

அ) 3 ஆ) 5 இ) 6 ஈ) 7

7. மூன்று அடி முதல் எழுதுபவர் மனநிலைக்கேற்ப அடி அமையும் பாவகை .............

அ) வெண்பா ஆ) ஆசிரியப்பா

இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா

8. சங்க காலத்திற்குப் பிந்தையக் காலம்......................

அ) அறநெறிக் காலம் ஆ) மன்னர் காலம்

இ) பக்திக் காலம் ஈ) சமயக் கலப்பில்லாக் காலம்

9. உலகிற்கான பணிகள் எதைச் சார்ந்து வளர வேண்டும்?

அ) மறம் ஆ) அறம்

இ) ஞானம் ஈ) கல்வி

10.ஆண்டுக்கு ஒருமுறை மலர்வது ...................

அ) பிரம்மகமலம் ஆ) சண்ப கம்

இ) குறிஞ்சி ஈ) முல்லை

II எவையேனும் எட்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும் 8 X 2 = 16

11.குறள்வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டுத் தருக..

12.குறிப்பு வரைக - அவையம்.

13.'கொள்வோர் கொ ள்க; குரைப்போர் குரைக்க !

உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது'

அ) அடியெதுகையை எடுத்தெழுதுக.

ஆ) இலக்கணக் குறிப்பு எழுதுக - கொள்க, குரைக்க

14.வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசை தூங்கல் ஓசை ஆகும். துள்ளல் ஓசை கலிப்பாவுக்கு உரியது.இத்தொடர்களை ஒரே தொடராக இணைத்து எழுதுக.

15.மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.

அ) மனக்கோட்டை ஆ) கண்ணும் கருத்தும்

16.சொற்களைப் பிரித்துப் பார்த்துப் பொருள் தருக. '**கானடை**'

**17.அகராதியில் காண்க.**

அ) ஆசுகவி ஆ) மதுரகவி

**18.கலைச்சொல் அறிவோம்:**

அ) Philosopher ஆ) Revivalism

**19.எவர் கூறாத ஒன்றைத் தான் கூற முனைவதாக கண்ணதாசன் குறிப்பிடுகிறார்?**

**20.காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



**III <u>எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும்</u> 2 X 4 = 8**

21.சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

22.ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

23.வாளித் தண்ணீர், சாயக் குவளை, கந்தைத் துணி, கட்டைத் தூரிகை - இச்சொற்களைத் தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க.

**IV <u>எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும்.</u> 1 X 8 =8**

24.பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

25.நாட்ட குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் நாடகம் எழுதுக.

26.மாணவன் - கொக்கைப் போல, கோழியைப் போல - உப்பைப் போல - இருக்க வேண்டும் - கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளும் - குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக்கொள்ளும் கோழி - கண்ணுக்குத்தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணரமுடியும் - ஆசிரியர் விளக்கம் - மாணவன் மகிழ்ச்சி .

**V எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும். 1 X 8 = 8**

27.காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.

கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!
ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை; அறிக!

**28.அ) அலகிட்டு வாய்பாடு எழுதுக. 5 + 3**

உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

**ஆ)** மூவசைச் சீர்கள் யாவை?